**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.84/2024**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ம் நாள் திங்கள் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 03.11.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | பிரபாகரன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 08.12.1985 தேதியிட்ட கிரய சாசனம் அசல் வா.சா.ஆ .1 ஆகவும், 20.01.2024 தேதியிட்ட வழக்கு A அட்டவணை சொத்திற்கான புல வரைபடம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ. 2 ஆகவும், 09.03.2024 தேதியிட்ட வில்லங்க சான்று பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 04.01.2023 தேதியிட்ட தாவா A அட்டவணை சொத்தை அளவீடு செய்ய கட்டணம் செலுத்தியதற்கான ரசீது வா.சா.ஆ. 4 ஆகவும், 28.02.2024 தேதியிட்ட தாவா A அட்டவணை சொத்திற்கான பட்டா வா.சா.ஆ.5 ஆகவும், 28.02.2024 தாவா A அட்டவணை சொத்தை அளவீடு செய்ய கட்டணம் செலுத்தியதற்கான ரசீது வா.சா.ஆ. 6 ஆகவும், முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.